**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி 09.02.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அடுமனைப் பொருட்கள் (பேக்கரி) தயாரிப்புப் பயிற்சி**

அடுமனைத் தொழில்நுட்பம் பற்றிய இரண்டு நாட்கள் பயிற்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வருகிற **15.02.2022** மற்றும் **16.02.2022** தேதிகளில் நடைபெறுகிறது.

அடுமனை உணவுப் பொருட்களுக்கு (Bakery Products) தற்பொழுது மக்கள் மத்தியில், அதிக வரவேற்பு உள்ளது. அதற்கான முக்கியக் காரணம் விரும்பத்தக்க வகையிலும் பற்சுவைகளிலும் மிக எளிதில் இவை கிடைப்பதேயாகும். வளர்ந்து வரும் இவ்வடுமனைத் தொழில்நுட்பங்கள் சிறுதொழில் முனைவோருக்கு தங்களது வருமானத்தைப் பெருக்க பெரிதும் உதவியாக இருக்கும்.

ஆகவே, பயிற்சியின்போது கீழ்க்காணும் அடுமனைப் பொருட்களான,

- ரொட்டி வகைகள்
- கேக் மற்றும் பிஸ்கட்
- பப்ஸ், கட்லெட் மற்றும் சமோசா

எளிய முறையில் தயாரிப்பதற்கான தொழில்நுட்பப்பயிற்சி அளிக்கப்படுகிறது . இத்தொழில்நுட்பத்தில் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் மற்றும் ஏனைய ஆர்வலர்கள் **ரூ.1,500.00 + 18% GST** செலுத்தி தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் **0422 - 6611268.**

மக்கள் தொடர்பு அலுவலர்